# 5 மாநிலத் தேர்தல் தேதிகள் அறிவிப்பு

**புது தில்லி, அக். 9:** தெலங்கானா, ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், மிஸோரம் ஆகிய 5 மாநில பேரவைத் தேர்தலுக்கான தேதிகள் திங்கள்கிழமை அறிவிக்கப்பட்டன.

அதன்படி, நவம்பர் 7, 17, 23, 30 ஆகிய தேதிகளில் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. சத்தீஸ்கரில் இரண்டு கட்டங்களாகவும், மற்ற மாநிலங்களில் ஒரே கட்டமாகவும் தேர்தல் நடைபெறுகிறது. 5 மாநிலங்களிலும் டிசம்பர் 3-ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளது.

2024 மக்களவைத் தேர்தலுக்கு அரையிறுதிக் களமாக கருதப்படும் இத்தேர்தல்களுக்கான கால அட்டவணையை, தில்லியில் திங்கள்கிழமை நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் வெளியிட்டார்.

அப்போது, அவர் கூறியதாவது: மிஸோரமில் மொத்தமுள்ள 40 பேரவைத் தொகுதிகளுக்கும் நவம்பர் 7-ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ளது. இதே நாளில், சத்தீஸ்கரின் 20 பேரவைத் தொகுதிகளுக்கு முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறும். இம்மாநிலத்தில் மீதமுள்ள 70 தொகுதிகளுக்கு நவம்பர் 17-ஆம் தேதி இரண்டாம்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவிருக்கிறது. மத்திய பிரதேசத்தில் மொத்தமுள்ள 230 தொகுதிகளுக்கும் இதே தினத்தில் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

200 பேரவைத் தொகுதிகளைக் கொண்ட ராஜஸ்தானில் நவம்பர் 23-ஆம் தேதியும், 119 பேரவைத் தொகுதிகளைக் கொண்ட தெலங்கானாவில் நவம்பர் 30-ஆம் தேதியும் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறவிருக்கிறது. அனைத்து மாநிலங்களிலும் டிசம்பர் 3-ஆம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்படும்.

## வாக்குப்பதிவு நவ.7 முதல் 30 வரை; வாக்கு எண்ணிக்கை டிச.3




ஐந்து மாநிலங்களுக்கான பேரவைத் தேர்தல் தேதிகளை புது தில்லியில் திங்கள்கிழமை அறிவித்த தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார். உடன் (இடமிருந்து) அனுப்சந்திர பாண்டே, அருண் கோயல்.

| தேர்தல் அட்டவணை | மிஸோரம் (40), சத்தீஸ்கர் (20) | ம.பி. (230), சத்தீஸ்கர் (70) | ராஜஸ்தான் (200) | தெலங்கானா (119) |
|---|---|---|---|---|
| வேட்பு மனு தாக்கல் தொடக்கம் | அக்.13 | அக்.21 | அக்.30 | நவ.3 |
| வேட்பு மனு கடைசி நாள் | அக்.20 | அக்.30 | நவ.6 | நவ.10 |
| வேட்பு மனு மீதான பரிசீலனை | அக்.21 | அக்.31 | நவ.7 | நவ.13 |
| வேட்புமனுவை திரும்பப் பெற கடைசி | அக்.23 | நவ.2 | நவ.9 | நவ.15 |
| வாக்குப்பதிவு | நவ.7 | நவ.17 | நவ.23 | நவ.30 |
| வாக்கு எண்ணிக்கை | டிச.3 | | | |
| மொத்த வாக்காளர்கள் | 16 கோடி பேர் | | | |

**1.77 லட்சம் வாக்குப்பதிவு மையங்கள்:** 5 மாநிலங்களிலும் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை சுமார் 16 கோடி. இதில் ஆண்கள் 8.2 கோடி பேர், பெண்கள் 7.8 கோடி பேர். இவர்களில் 60.2 லட்சம் பேர் முதல்முறை வாக்காளர்கள்.

மொத்தம் 1.77 லட்சம் வாக்குப்பதிவு மையங்கள் அமைக்கப்படவுள்ளன. இவற்றில் சுமார் 1 லட்சம் மையங்களில் இணைய ஒளிபரப்பு வசதி மேற்கொள்ளப்படும். 8,000-க்கும் மேற்பட்ட வாக்குப்பதிவு மையங்கள் முழுமையாக பெண்களால் நிர்வகிக்கப்படும்.

**940 சோதனைச் சாவடிகள்:** வாக்காளர்களைக் கவர பணம், மதுபானம், இலவசப் பொருள்கள் உள்ளிட்டவை விநியோகிக்கப்படுவதை தடுக்க மொத்தம் 940 சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

பறிமுதல் நடவடிக்கைகளை இட்டமிடுதல், பறிமுதலாகும் பொருள்கள் குறித்த தரவுகளை பராமரித்தல் உள்ளிட்ட பணிகளுக்காக தொழில்நுட்ப அடிப்படையில் புதிய அமைப்புமுறை செயல்படுத்தப்படவுள்ளது.

சந்தேகத்துக்குரிய இணையவழி பரிவர்த்தனைகள் குறித்தும் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்படும். 2024 மக்களவைத் தேர்தலுக்கு முன்பாக நடைபெறும் கடைசி தேர்தல்கள் இவைதான் என்றார் ராஜீவ் குமார்.

**பிரத்யேக மையங்களில் மட்டுமே தபால் வாக்கு:** தேர்தல் பணியில் இருக்கும் ஊழியர்கள், தங்களது தபால் வாக்கை அதற்கான பிரத்யேக மையங்களில் மட்டுமே செலுத்த முடியும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தபால் வாக்குகள் தவறாக பயன்படுத்தப்படுவதை தடுக்கும் வகையில், தேர்தல் விதிமுறைகள் அண்மையில் திருத்தப்பட்டன. அதன்படி, தபால் வாக்குக்கான படிவத்தை ஊழியர்கள் நீண்ட காலம் தங்களுடன் வைத்துக் கொள்ள முடியாது.

தேர்தல் பணிக்காக ஒதுக்கப்படும் இடங்களுக்கு செல்லும் முன்பாக பிரத்யேக மையங்களில் தபால் வாக்கை செலுத்த வேண்டும்.

'எதிர்வரும் 5 மாநிலத் தேர்தல் பணிகளில் ஈடுபடும் ஊழியர்கள், இந்த புதிய நடைமுறைப்படி பிரத்யேக மையங்களில் மட்டுமே தபால் வாக்கை செலுத்த வேண்டும்' என்று தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் தெரிவித்தார்.

**நடத்தை விதிகள் அமல்:** தேர்தல் தேதி அறிவிப்பைத் தொடர்ந்து, மேற்கண்ட 5 மாநிலங்களிலும் நடத்தை விதிகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளன.

## பாஜக–காங்கிரஸ் பலப்பரீட்சை

பேரவைத் தேர்தல் நடைபெறவிருக்கும் 5 மாநிலங்களில் ராஜஸ்தான் மற்றும் சத்தீஸ்கரில் காங்கிரஸ் ஆட்சியில் உள்ளது. மத்திய பிரதேசத்தில் பாஜகவும், தெலங்கானாவில் பாரத ராஷ்டிர சமிதியும், மிஸோரமில் மிஸோ தேசிய முன்னணியும் ஆட்சி அதிகாரத்தில் உள்ளன.

ராஜஸ்தான், சத்தீஸ்கர், மத்திய பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களில் பாஜகவும் காங்கிரஸும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. தெலங்கானா தேர்தல் களமானது, ஆளும் பாரத ராஷ்டிர சமிதி, பாஜக, காங்கிரஸ் என மும்முனை போட்டியை எதிர்கொண்டுள்ளது. மிஸோரமில் ஆளும் மிஸோ தேசிய முன்னணி, பிராந்திய கட்சிகள் மற்றும் காங்கிரஸ் இடையே போட்டி நிலவுகிறது.

EVA STALIN IAS



# பெண் பொருளாதார நிபுணருக்கு நோபல் பரிசு

**ஸ்டாக்ஹோம், அக். 9:** அமெரிக்காவைச் சேர்ந்த பெண் பொருளாதார நிபுணர் க்ளாடியா கோல்டினுக்கு (77) பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் சந்தையில் பெண்களின் பங்களிப்பு, பணியிடத்தில் பாலின இடைவெளி தொடர்பான புரிதல்களை மேம்படுத்தும் ஆய்வுகளுக்காக அவருக்கு நோபல் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரத்துக்கான நோபல் தொடர்பான அறிவிப்பை ஸ்டாக்ஹோமில் ஸ்வீடன் அகாதெமி திங்கள்கிழமை வெளியிட்டது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தொழிலாளர் சந்தையில் பெண்களின் பங்களிப்பு குறித்து அறிந்து கொள்வது நமது சமூகத்துக்கு மிகவும் முக்கியமானது. அதில் கடந்த 200 ஆண்டுகளாக பெண்கள் அளித்து வரும் பங்களிப்பு குறித்து க்ளாடியா கோல்டின் ஆய்வு மேற்கொண்டுள்ளார். இந்த ஆய்வைத் தொடங்கி வைத்து சிறப்பாகப் பணியாற்றிய க்ளாடியா கோல்டினுக்கு நன்றி.

பெண்களின் பங்களிப்பு தவிர்க்க முடியாததாக இருந்தபோதிலும், பல இடங்களில் ஆண்டுகளுக்கு நிகராக அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படுவதில்லை. ஆண்களைவிட பெண்கள் அதிகம் படித்த முன்னேறிவரும் இக்காலகட்டத்திலும் கூட இது போன்ற பாகுபாடு தொடர்கிறது.

தனது ஆய்வு மூலம் புதைந்து கிடந்த பல உண்மைகளை நமக்கு அவர் உணர்த்தியுள்ளார். உழைக்கும் பெண்களுக்கு எதிராக உள்ள பல தடைகள் எதிர்காலத்தில் தொடர்ந்து தீர்க்கப்பட வேண்டும். பிரச்னைகளுக்கான தீர்வுகளை க்ளாடியா கோல்டினின் ஆய்வு பரிந்துரைக்கவில்லை என்றபோதிலும், அரசின் கொள்கைகளை வகுப்பவர்கள் பிரச்னைகளின் வேரை அறிந்து அவற்றைக் களைய அவர் வழிகாட்டியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு பரிசுத் தொகையாக 10 லட்சம் டாலர் (சுமார் ரூ.8.32 கோடி) வழங்கப்படும்.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் 1946-ஆம் ஆண்டு யூத குடும்பத்தில் பிறந்த க்ளாடியா கோல்டின், அறிவியல் துறையில் சாதிக்க வேண்டும் என்ற நோக்கில் பள்ளிப்படிப்பின்போது அறிவியலை முதன்மைப் பாடமாக படித்தார். மேல்நிலைப் படிப்பில் எதேச்சையாக பொருளாதார நிபுணர் ஆல்பர்ட் எட்வர்ட் வகுப்பில் பங்கேற்ற அவருக்கு பொருளாதார பாடத்தின் மீது ஆர்வம் அதிகரித்தது. இதைத் தொடர்ந்து பொருளாதாரத்தில் பட்டப் படிப்பு, ஆய்வுப் படிப்பை நிறைவு செய்தார். சிகாகோ பல்கலைக்கழகத்தில் பிஎச்டி பட்டம் பெற்றார். தற்போது ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியாற்றுகிறார்.

'பணிச்சூழல் மற்றும் குடும்பம் – சம வாய்ப்புக்கான பெண்களின் நூற்றாண்டு கால போராட்டம்' என்ற தலைப்பிலான ஆய்வு நூலை கடந்த 2021-ஆம் ஆண்டு அவர் வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

க்ளாடியா கோல்டின்

## 3-ஆவது பெண்மணி

கடந்த 1968-ஆம் ஆண்டு பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு உருவாக்கப்பட்டது. இது வரை 92 பொருளாதார நிபுணர்கள் நோபல் பரிசு பெற்றுள்ளனர். அவர்களில் இருவர் மட்டுமே பெண்கள். இந்த ஆண்டு க்ளாடியா கோல்டின் பொருளாதாரத் துறையில் நோபல் பரிசு பெற்ற பெண்கள் வரிசையில் இடம் பிடித்துள்ளார்.

# வரவேற்கப்பட வேண்டிய தீர்ப்பு!

வாச்சாத்தி பாலியல் வன்கொடுமை வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியுள்ளது. பாதிக்கப்பட்ட பழங்குடி மக்கள் இந்தத் தீர்ப்பை பெற 31 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது. இந்தக் காத்திருப்பும் ஏமாற்றமாகப் போய்விடுமோ என்ற அச்சம் இத்தனை நாள் இருந்து வந்தது. அந்த அச்சம் இத்தீர்ப்பின் மூலம் நீங்கியது.

தருமபுரி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் அளித்த தீர்ப்பினை அப்படியே ஏற்றுக்கொண்டு சென்னை உயர்நீதிமன்றம் மேல் முறையீட்டு மனுக்களைத் தள்ளுபடி செய்து விட்டது. பாதிக்கப்பட்ட பழங்குடியினப் பெண்களுக்கு அரசு வேலையுடன் ரூ.10 லட்சம் நிவாரணம் வழங்குமாறு உத்தரவிட்டுள்ளது.

வனத் துறை, காவல் துறை, வருவாய்த் துறை என்னும் அதிகாரத் துறையினரை எதிர்த்து ஒடுக்கப்பட்ட எளிய பழங்குடி மக்கள் நிற்க முடியுமா? அப்போது தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கம், தேசிய பழங்குடியினர், பட்டியலின மக்கள் நல ஆணையம், மகளிர் அமைப்பினர், அரூர் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் இவர்களின் கூட்டு முயற்சியின் காரணமாக சிபிஐ விசாரணைக்கு சென்னை உயர்நீதிமன்றம் கடந்த 1993-இல் உத்தரவிட்டது.

சிபிஐ இரண்டு ஆண்டுகள் விசாரணை நடத்தி 1995-இல் வழக்குப் பதிவு செய்தது. குற்றத்தில் ஈடுபட்டதாக 155 வனத் துறையினர், 108 காவல் துறையினர், 6 வருவாய்த் துறையினர் என 269 பேரை காவல் துறை கைது செய்தது.

இடதுசாரி இயக்கங்களும், மக்களும் தொடர்ந்து போராடினர். சமூக ஆர்வலர்களும், ஊடகத் துறையினரும் இந்தக் கொடுமையை நீதியின் பார்வைக்குக் கொண்டு சென்றனர்.

தருமபுரி மாவட்டம் அரூர், பாப்பிரெட்டிபட்டிக்கு இடையில் கல்வராயன் மலைத் தொடரின் அடிவாரப் பகுதியில் அமைந்துள்ளது வாச்சாத்தி கிராமம்.

இந்தக் கிராமத்தில் மலைவாழ் பழங்குடி மக்கள் சந்தன மரங்களை வெட்டிக் கடத்துவதாக புகார் தெரிவித்த காவல் துறையினர், இது குறித்து விசாரணை நடத்துவதற்காக வனத் துறையினர், வருவாய் அலுவலர்கள் அடங்கிய கூட்டுக் குழுவினருடன் கடந்த 1992 ஜூன் 20 அன்று வாச்சாத்தி கிராமத்துக்குச் சென்று சோதனை நடத்தினர்.

அந்த கிராமத்தில் மூன்று நாள் தங்கி தேடுதல் பணியை அவர்கள் மேற்கொண்டனர். அப்போது வீடுகளுக்குள் புகுந்து பொருள்களைச் சூறையாடினர். இதில் வாச்சாத்தி கிராமத்தைச் சேர்ந்த 133 பேரைக் கைது செய்தனர். அவர்களில் 90 பேர் பெண்கள்; 28 பேர் குழந்தைகள்; 15 பேர் ஆண்கள்.


உதயை மூ. வீரையன்

தமிழக வனத் துறை, காவல் துறை, வருவாய்த் துறை அதிகாரிகள் அடங்கிய கூட்டுக் குழுவினர் பழங்குடியினர் மீது பாலியல் வன்முறை செய்ததாக புகார் பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கு தொடர்பான விசாரணை தருமபுரி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரும் குற்றவாளிகளே என்று கடந்த 2011 ஜூலை 29 அன்று நீதிபதி குமரகுரு தீர்ப்பளித்தார். இந்த வழக்கில் மொத்தம் 269 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

வழக்கு நடைபெற்று வந்த 19 ஆண்டுகளில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தவர்களில் 54 பேர் உயிரிழந்து விட்டனர். மீதமுள்ள 215 பேரும் குற்றவாளிகள் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இவர்களில் 126 பேர் தமிழக அரசின் வனத்துறை அலுவலர்கள். 84 பேர் காவல்துறையினர். 5 பேர் வருவாய்த் துறையினர்.

வழக்கு விசாரணையை அப்போதைய காவல்துறை முறையாக நடத்தவில்லை என்ற புகார் எழுந்தது. அதைத் தொடர்ந்து இந்த வழக்கு மத்திய புலனாய்வுப் பிரிவுக்கு மாற்றப்பட்டது.

**வாச்சாத்தி விவகாரத்தில் பண உதவியும், நிரந்தர அரசு வேலையும்தான் வேதனைக்குத் தீர்வாக இருக்க முடியும். பாதிக்கப்பட்ட வாச்சாத்தி கிராமத்தினரின் மறுவாழ்வுக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து அரசு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் எனத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.**

பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட 17 பேர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக நீதிபதி அறிவித்தார். இவர்களில் 12 பேருக்கு 10 ஆண்டுகளும், ஐந்து பேருக்கு 7 ஆண்டுகளும் தண்டனை விதிக்கப்பட்டது.

வாச்சாத்தி மக்களை பல்வேறு வழிகளில் துன்புறுத்தியது, பழங்குடி மக்களின் உடைமைகளைச் சூறையாடியது உள்ளிட்ட செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு குறைந்த அளவு இரண்டு ஆண்டுகள் முதல் அதிக அளவாக ஐந்து ஆண்டுகள் வரை தண்டனை விதிக்கப்பட்டது.

தருமபுரி மாவட்ட முதன்மை நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து வழக்கில் தண்டனை பெற்றவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். இந்த மேல்முறையீட்டு மனுக்களை விசாரித்த நீதிபதி வேல்முருகன் கடந்த மார்ச் 4 அன்று வாச்சாத்தி மலைக்கிராமத்துக்கு நேரடியாகச் சென்று மக்களிடம் பேசினார்.

அப்போது வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களை நீதிபதி பார்வையிட்டார். இந்த நிலையில் வாச்சாத்தி வன்கொடுமை வழக்குகளில் தருமபுரி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக தொடரப்பட்ட மேல்முறையீட்டு மனுக்கள் அனைத்தையும் சென்னை உயர்நீதிமன்றம் செப்டம்பர் 29 அன்று தள்ளுபடி செய்தது.

மொத்தம் 18 பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளானார்கள். 13 வயது சிறுமி, 8 மாத கர்ப்பிணியும் இதில் அடங்குவர். சந்தனமரக் கடத்தலில் ஈடுபட்டவர்களை அரசுப் பணி நிமித்தமாகவே கைது செய்ததாகவும், அதற்குப் பழி வாங்கும் விதமாகவே பொய்யான பாலியல் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வாதிடப்பட்டது.

அப்பாவி இளம்பெண்களை வன்கொடுமை செய்வது அரசுப்பணி இல்லையாது. சந்தனமரக் கடத்தலில் ஈடுபடும் பெரும் புள்ளிகளைக் காப்பாற்றும் நோக்கில் வனத் துறை, காவல் துறையினர் ஒட்டுமொத்த கிராமத்தையும் பலிகடா ஆக்கியுள்ளனர். ஐந்து நாள்கள் சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெண்களை நள்ளிரவு 12 மணிக்கு கைது செய்துள்ளனர். இந்தச் சம்பவம் குறித்து ஒரு மாதம் கழித்தே வெளியே தெரியவந்துள்ளது. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகே அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டுள்ளது.

10 ஆண்டுகளுக்கு பிறகே நீதிமன்ற விசாரணை தொடங்கியுள்ளது. சீருடை அணிந்த அரசு ஊழியர்கள் குற்றம் செய்துள்ளனர் என்பதை சிபிஐ உறுதி செய்துள்ளது.

இந்த வழக்கில் கீழமை நீதிமன்றம் சரியான தீர்ப்பைத்தான் அளித்துள்ளது என்பதால், மேல்முறையீட்டு மனுக்கள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

பண உதவியும், நிரந்தர அரசு வேலையும்தான் இந்த வேதனைக்குத் தீர்வாக இருக்க முடியும். எனவே, பாதிக்கப்பட்ட 18 பெண்களுக்கும் அரசு வேலையுடன் தலா ரூ. 10 லட்சத்தைத் தமிழக அரசு நிவாரணமாக வழங்க வேண்டும். பாதிக்கப்பட்ட வாச்சாத்தி கிராமத்தினரின் மறுவாழ்வுக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து அரசு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் எனத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

அப்போதைய தருமபுரி ஆட்சியர், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர், மாவட்ட வனத் துறை அதிகாரி ஆகியோர் குற்றத்தை மூடி மறைத்துள்ளனர். இவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இத்தகைய கொடுமை எங்கும் யாருக்கும் நடைபெறக் கூடாது என்று மனித நேயம் கொண்டவர்கள் நினைக்கின்றனர். அந்தப் பாவப்பட்ட அப்பாவி மக்களின் நிலையை நினைத்துப் பார்க்க நெஞ்சம் நடுங்குகிறது.

அதிகாரிகள் அரசு கட்டிக் கொடுத்த தொகுப்பு வீடுகளை அடித்து நொறுக்கியுள்ளனர். சாப்பாட்டுக்கு வழியில்லாமல் நியாயவிலைக் கடை சூறையாடப்பட்டது. ஆடு, மாடுகளை அடித்துக் கொன்றனர். கோழிகளைப் பிடித்து அடித்து அங்கேயே சமைத்துச் சாப்பிட்டனர். 90 பெண்கள் உள்பட கைது செய்யப்பட்டவர்களை, ஊர் நடுவே இருந்த ஆல மரத்தடிக்கு அழைத்து வந்துள்ளனர். அன்று மாலை, ஏரிக்கரையில் மறைத்து வைத்திருந்த சந்தனக் கட்டைகளை எடுத்துத் தருமாறு கூறி, 18 பெண்களை மட்டும் தனியாக அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

மனிதர்கள் சக மனிதர்களை இப்படியும் நடத்துவார்களா என்ற கேள்வி எழுகிறது. அரசியல்வாதிகள் எதிர்க்கட்சியினராக இருக்கும்போது மக்களுக்கு ஆதரவாகப் பேசுவதும், அவர்கள் ஆட்சியில் அமர்ந்ததும் வாக்களித்த மக்களை திரும்பிப் பார்க்காத நிலையும் தொடர்கிறது.

எப்படியோ அதிகாரத்துக்கு வரும் அதிகாரிகள் மக்களுக்குப் பணி செய்ய வந்தவர்கள் என்பதை வசதியாக மறந்து விடுகின்றனர். மக்கள் பணத்தில்தான் ஊதியம் பெறுகிறோம் என்பதையும் மறந்து விடுகின்றனர். பொதுமக்களை புழுவைப் போல பார்க்கின்றனர். இந்த மனநிலை எப்படி வந்தது?

இந்தத் தீர்ப்பின் மூலம் மக்களுக்கு நீதிமன்றத்தின் மேல் நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. ஆட்சியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் அச்சம் ஏற்பட்டிருக்கிறது. வாச்சாத்தி தீர்ப்பை வரவேற்போம்.

கட்டுரையாளர்:
**எழுத்தாளர்.**

# தன்னம்பிக்கைக்கான விருது!

மருத்துவத் துறைக்கான நோபல் விருது, கொவைட் 19 கொள்ளை நோய்த்தொற்றுக்கான 'எம்ஆர்என்ஏ' தடுப்பூசியை உருவாக்கிய பேராசிரியர் கேத்தலின் கரிக்கோவுக்கும், அவருடன் இணைந்து ஆராய்ச்சி செய்த ட்ரூ வைஸ்மனுக்கும் இந்த ஆண்டு வழங்கப்பட்டிருக்கிறது. தடுப்பூசி கண்டுபிடிப்பதில் இரவு பகலாக உழைத்த அனைத்து விஞ்ஞானிகளுமே நோபல் விருதுக்குத் தகுதியானவர்கள்தான் என்றாலும், அவர்களில் கேத்தலின் கரிக்கோவையும் ட்ரூ வைஸ்மனையும் தேர்ந்தெடுத்ததற்கு சில சிறப்புக் காரணங்கள் இல்லாமல் இல்லை.

எந்தவொரு கண்டுபிடிப்பின் முக்கியத்துவத்தையும் குறுகிய கண்ணோட்டத்தில் அல்லது நிகழ்காலத் தேவையின் அடிப்படையில் மட்டுமே எடைபோடக் கூடாது. விருது பெறும் விஞ்ஞானிகளின் 'எம்ஆர்என்ஏ' புரத ஆராய்ச்சி, கொவைட் 19 தடுப்பூசியுடன் மட்டும் நின்றுவிடுவதல்ல. நோய் எதிர்ப்புத் திறனை ஊக்குவிப்பதில் 'எம்ஆர்என்ஏ' எந்த அளவுக்கு செயல்பட முடியும் என்கிற அடிப்படைப் புரிதல், இவர்களது ஆராய்ச்சியின் மூலம் மனித இனத்துக்குக் கிடைத்திருக்கிறது என்பதால்தான் அவர்களுக்கு நோபல் விருது தரப்பட்டிருக்கிறது.

நோபல் விருதுக்குப் பெண் விஞ்ஞானி ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியை அளிக்கிறது. இதுவரை நோபல் விருது பெற்ற ஆண்கள் 894 பேர் என்றால், அவர்களில் பெண்கள் 62 பேர் மட்டுமே. மருத்துவத்துக்கான நோபல் விருது என்று எடுத்துக்கொண்டாலும், 225 பேரின் தேர்வில் கரிக்கோவையும் சேர்த்து 13 பேர்தான்.

கொவைட் 19 கொள்ளை நோய்த்தொற்றை எதிர்கொள்ள தடுப்பூசி கண்டுபிடிப்பதில் முனைந்த பல விஞ்ஞானிகளில், வெற்றிகரமாக உருவான ஆறு தடுப்பூசிகளைக் கண்டுபிடித்தவர்கள் பெண்கள் என்பது அதிகம் பேசப்படாத உண்மை. கோவேக்ஸின் தடுப்பூசியில் டாக்டர் கே. சுமதி, நோவாக்ஸின் தடுப்பூசி உருவாக்கிய நிதா கே. படேல், கோவிஷீல்ட் தடுப்பூசியில் சாரா காத்தரின் கில்பெர்ட், ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனத்துக்காக வெற்றிகரமாக தடுப்பூசி ஆராய்ச்சி செய்த ஹானக்கே ஷுட்மேக்கர், ரஷியாவின் ஸ்பூட்னிக் – வி தடுப்பூசியின் சூத்திரதாரியான எலீனா ஸ்மோலியார்சூக் ஆகியோர் நோபல் விருது பெறாவிட்டாலும் பாராட்டுக்குரியவர்கள்.

ஹங்கேரியில் பிறந்த கரிக்கோவின் வெற்றி என்பது தன்னம்பிக்கைக்கும், விடாமுயற்சிக்கும் கிடைத்த வெற்றி என்பதால் கொண்டாடப்பட வேண்டிய ஒன்று. ஹங்கேரியில் பிறந்த கேத்தலின் கரிக்கோ செகெட் பல்கலைக்கழகத்தில் உயிரியலில் முனைவர் பட்டம் பெற்றார். அமெரிக்காவுக்குக் குடியேறி அங்குள்ள பென்சில்வேனியாவின் டெம்பிள் பல்கலைக்கழத்தில் முதுமுனைவர் பட்டம் பெற்றார்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

அவருக்கு ஒரு வித்தியாசமான பார்வை இருந்தது. மெசஞ்சர் ரிபோநியூக்ளிக் ஆசிட் எனப்படும் ‘எம்ஆர்என்ஏ’ மனித உடலில் புரோட்டீன் உருவாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது. அந்த ‘எம்ஆர்என்ஏ’வை எப்படி பயன்படுத்த முடியும் என்பதுதான் கரிக்கோவின் ஆராய்ச்சி. 1980–இல் ‘எம்ஆர்என்ஏ’ அடிப்படையில் தடுப்பூசி தயாரித்து, எதிர்வினைகள் ஏற்பட்டதால் கைவிடப்பட்டது. அப்படி இருந்தும் தளர்ந்துவிடாமல் தனது ஆய்வைத் தொடர்ந்தார் கரிக்கோ.

அவரது ஆராய்ச்சிக்கு ஊக்கம் அளிக்க யாரும் முன்வரவில்லை. பல்கலைக்கழகங்களும் அதற்கு உதவத் தயாராக இல்லை. ஊதியக் குறைப்புக்கும், பதவி இறக்கத்துக்கும் சம்மதித்ததால்தான் அவர் 1995–இல் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சியாளராகத் தொடர அனுமதிக்கப்பட்டார். தனக்கென ஆராய்ச்சிக் கூடம்கூட இல்லாமல், ‘எம்ஆர்என்ஏ’ தடுப்பூசி மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்கிற நம்பிக்கையுடன் தனது ஆய்வைத் தொடர்ந்தார் கரிக்கோ.

பல்கலைக்கழத்தில் இன்னொரு ஆய்வில் இருந்த ட்ரூ வைஸ்மன் அவருடன் இணைந்தபோது, 2005–இல் அவர்கள் தங்களது ஆராய்ச்சி முடிவை வெளியிட்டனர். ‘எம்ஆர்என்ஏ’வின் மாற்றத்தால் ஏற்படும் பின்விளைவுகளை எதிர்கொள்ள சில மாற்றங்களைச் செய்தனர். அப்படியும் சில பிரச்னைகள் இருந்தன.

சோதனைச் சாலையில் உருவாக்கப்படும் ‘எம்ஆர்என்ஏ’ மனித உடலில் உள்ள திசுக்களுக்கு பாதிப்பில்லாமல் செலுத்தப்படுவது எப்படி என்பதுதான் தெரியவில்லை. பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழத்தின் ஆராய்ச்சியாளர் பீட்டர் கல்லிஸ் அதற்கான விடையைக் கண்டுபிடித்திருந்தார்.

கரிக்கோ, வைஸ்மன், கல்லிஸ் ஆகிய மூவர் கூட்டணியின் ஆய்வு முடிவால், குறிப்பிட்ட புரதத்தை தடுப்பூசி மூலம் மனிதத் திசுக்களில் வெற்றிகரமாகச் செலுத்த முடியும். அந்தத் தடுப்பூசியை விரைவாகவும் அதிக அளவிலும் தயாரிக்க முடியும். அப்படியும் அவர்களுக்கு அமெரிக்காவின் ஆதரவும் அங்கீகாரமும் கிடைக்கவில்லை.

துருக்கியிலிருந்து புலம்பெயர்ந்த இரண்டு விஞ்ஞானிகள் ஜெர்மனியில் தொடங்கியிருந்த ‘பையோஎன் டெக்’ என்கிற நிறுவனத்தில் இணைந்தார் கரிக்கோ. ‘நிபா’ தீநுண்மிக்கு எதிராகத் தடுப்பூசி கண்டுபிடிக்கும் வேளையில், கொவைட் 19 உருவானது. மூவர் கூட்டணியின் புதிய தொழில்நுட்பத்தில் உருவான தடுப்பூசி, ஃபைசர் நிறுவனத்தின் பார்வை பட்டதால், மிகப் பெரிய அளவில் வெற்றியும் அடைந்தது.

தனது ஆராய்ச்சி வெற்றி பெறும், அங்கீகாரம் பெறும் என்று முப்பது ஆண்டுகளாக கரிக்கோ தன்னம்பிக்கையுடன் காத்திருந்தார். தனது மகளுக்கு என்றாவது ஒருநாள் நோபல் விருது கிடைக்கும் என்று கேத்தலின் கரிக்கோவின் தாயார் எதிர்பார்த்துக் காத்திருந்தார். அவர்களது நம்பிக்கை பொய்க்கவில்லை.

நோபல் விருதில் விஞ்ஞானி பீட்டர் கல்லிஸ் இணைக்கப்படாதது மிகப் பெரிய விடுபடல்!

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# இந்தியா – தான்ஸானியா பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிக்க முடிவு

**புது தில்லி, அக். 9:** இந்தியா வந்துள்ள தான்ஸானியா அதிபர் சாமியா சுலுஹு ஹசன் பிரதமர் நரேந்திர மோடியை தில்லியில் திங்கள்கிழமை சந்தித்துப் பேசினார். அப்போது, இந்தியா, தான்ஸானியா இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிக்க முடிவெடுக்கப்பட்டது.

இரு நாடுகள் இடையே எண்மயமாக்கல், கலாசாரம், விளையாட்டு, கடல்சார் தொழில்கள், வர்த்தக கப்பல் பயண தகவல் பரிமாற்றம் உள்ளிட்ட பிரிவுகளில் 6 ஒப்பந்தங்களும் கையொப்பமாகின.

கிழக்க ஆப்பிரிக்க நாடான தான்ஸானியாவின் முதல் பெண் அதிபரான சாமியா சுலுஹு ஹசன், நான்கு நாள் பயணமாக இந்தியாவுக்கு ஞாயிற்றுக்கிழமை வந்தார். பயணத்தின் முதல்நாளில் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை சந்தித்துப் பேசினார்.



புது தில்லி குடியரசுத் தலைவர் மாளிகையில் தான்ஸானியா அதிபர் சாமியா சுலுஹு ஹசனை அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்ற குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி.

தொடர்ந்து குடியரசுத் தலைவர் மாளிகையில் திங்கள்கிழமை அவருக்கு அரசுமுறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் பங்கேற்று அவரை வரவேற்றனர்.

தொடர்ந்து பிரதமர் மோடியுடன் சாமியா சுலுஹு ஹசன் பேச்சுவார்த்தை நடத்தினார். தில்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் இந்த ஆலோசனை நடைபெற்றது. தொடர்ந்து இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது பிரதமர் மோடி கூறியதாவது:

இரு நாட்டு உறவில் இன்றைய தினம் வரலாற்றுச் சிறப்புமிக்க தினமாகும். இரு நாடுகள் இடையே உள்ள பல ஆண்டுகால நட்பு, இப்போது பல துறைகளில் இணைந்து பணியாற்றும் கூட்டாளி நாடுகளாக உருவெடுத்துள்ளது.

இந்தியாவும் தான்ஸானியாவும் முக்கியமான வர்த்தக, முதலீட்டு கூட்டாளி நாடுகளாக திகழும். இருநாடுகள் இடையே உள்நாட்டு பணத்தின் மூலம் வர்த்தகத்தை மேற்கொள்வது தொடர்பாக பேச்சுவார்த்தையை முன்னெடுக்க ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்த 5 ஆண்டு கால திட்டத்தை உருவாக்கியுள்ளோம். ராணுவ பயிற்சி, கடல்சார் ஒத்துழைப்பு, ராணுவ தளவாட துறை உற்பத்தி உள்ளிட்டவற்றிலும் இரு நாடுகளும் கைகோக்க இருக்கின்றன.

மனிதகுலத்துக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக பயங்கரவாதம் திகழ்கிறது என்பதை இரு நாடுகளும் ஒருமனதாக ஒப்புக் கொண்டுள்ளன. பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் ஒத்துழைப்பை அதிகரிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்திய-பசிபிக் பிராந்தியத்தில் இந்தியாவின் முக்கிய கூட்டாளி நாடாக தான்ஸானியா உள்ளது என்றார்.

# சிக்கிம் வெள்ளம்: உயிரிழந்தோர் எண்ணிக்கை 34-ஆக உயர்வு


**கேங்டாக், அக்.9:** சிக்கிம் மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 34-ஆக அதிகரித்தது என அதிகாரிகள் திங்கள்கிழமை தெரிவித்தனர்.

வடக்கு சிக்கிமில் உள்ள லோனாக் ஏரிப் பகுதியில் கடந்த புதன்கிழமை மேகவெடிப்பால் கனமழை பெய்து, தீஸ்தா நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இந்த வெள்ளத்தில் சிக்கி 105 பேர் காணாமல் போன நிலையில், அவர்களைத் தேடும் பணி 6-ஆவது நாளாகத் தொடர்ந்தது.

**சுற்றுலாப் பயணிகள் மீட்பு:** மீட்பு மற்றும் நிவாரண பணிகளில் இந்திய விமானப் படையின் மிஐ-17, சினூக் ஹெலிகாப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு சிக்கிமின் லான்சென், லான்குங் ஆகிய நகரங்களில் சிக்கியிருந்த சுற்றுலாப் பயணிகள் சுமார் 400 பேர், ஹெலிகாப்டர்கள் மூலம் மீட்கப்பட்டு பாக்யாங் விமான நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



வடக்கு சிக்கிம் மலைப் பகுதியில் தற்காலிகப் பாலம் அமைக்கும் பணியில் திங்கள்கிழமை ஈடுபட்ட ராணுவத்தினர்.

**மத்திய குழு ஆய்வு:** வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மங்கன், கேங்டாக், நாம்சி, பாக்யாங் உள்ளிட்ட மாவட்டங்களை மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களைச் சேர்ந்த அதிகாரிகள் அடங்கிய குழு திங்கள்கிழமை பார்வையிட்டது. அப்போது, சேதமடைந்த கட்டடங்கள், மின் இணைப்புகள், சாலைகள், பாலங்கள் ஆகியவற்றை அந்தக் குழு பார்வையிட்டது.

முன்னதாக, வெள்ள பாதிப்பு குறித்த ஆய்வு கூட்டம் மாநில முதல்வர் பிரேம் சிங் தமாங் தலைமையில் நடைபெற்றது.

இதில் மாநில தலைமைச் செயலர் வி.பி.பாடக், சிக்கிம் மாநிலத்துக்கு பயணம் மேற்கொண்டுள்ள ராணுவ தலைமை தளபதி மனோஜ் பாண்டே உள்ளிட்டோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# தென்பெண்ணை ஆற்றுப் படுகையில் சோழர் கால செப்பு நாணயங்கள்



தென்பெண்ணை ஆற்றுப் படுகையில் கண்டெடுக்கப்பட்ட செப்பு நாணயங்கள்.

**நெய்வேலி, அக். 9:** கடலூரர் மாவட்டம், உளுந்தாம்பட்டு பகுதி தென்பெண்ணை ஆற்றுப் படுகையில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வில் சோழர், விஜய நகர பேரரசு கால செப்பு நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன.

பண்ருட்டியைச் சேர்ந்த தொல்லியல் ஆய்வாளர் இம்மானுவேல் அரசுப் பள்ளி மாணவர்களுடன் இணைந்து பண்ருட்டி வட்டம், உளுந்தாம்பட்டில் தென்பெண்ணை ஆற்றங்கரையில் கள ஆய்வு மேற்கொண்டார். அப்போது மாணவர்கள் பழங்கால 3 செப்பு நாணயங்களை கண்டெடுத்தனர். இதுகுறித்து இம்மானுவேல் கூறியதாவது:

மாணவர்கள் கண்டறிந்ததில் 2 நாணயங்கள் ராஜராஜன் பெயர் பொறித்த சோழர் காலத்தைச் சேர்ந்தவை. மற்றொன்று விஜயநகர பேரரசு கால நாணயம். சோழர் கால நாணயங்களில் தேவநாகரி எழுத்துகளில் 'ஸ்ரீராஜராஜ' என பொறிக்கப்பட்டுள்ளது. நாணயத்தின் மற்றொருபுறம் கையில் மலர் ஏந்தியவாறு ஒருவர் நிற்க, அவரது இடப்பக்கம் 4 வட்டங்கள் உள்ளன. அவற்றின் மேலே பிறையும் கீழே மலரும் உள்ளன. விஜயநகர பேரரசு கால நாணயத்தின் ஒருபுறம் தேவநாகரி எழுத்தில் 'ஸ்ரீநீலகண்டா' என்று பொறிக்கப்பட்டுள்ளது. மற்றொருபுறம் காளை உருவமும், பிறையும் உள்ளன. தென்பெண்ணை ஆற்றங்கரை பகுதியில் சங்க காலம் முதல் சோழர் காலம் வரை பழங்கால மக்கள் வாழ்ந்ததற்கான தொல்லியல் தடயங்கள் தொடர்ந்து கண்டறியப்பட்டு வருகின்றன என்றார் அவர்.